From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 4/14

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : தமிழ்செல்வம் | Father/Husband Name | : சுப்பையா |
| Age | : | Calling | : |
| Date | : 08.10.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 08 day of 10.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரி ஆஜர்.**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது கொடுக்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி தனுஸ்கோடியை எனக்கு தெரியும். ஆஜர் 1ம் எதிரியை 15 வருடங்களுக்கு முன்னதாக பார்த்த ஞாபகம் இருக்கிறது. ஆஜர் 2ம்எதிரி வெங்கடேஷ்வரியை தெரியாது. ஆ ஜெயமணி என்பவரை தெரியும். ஜெயமணியை திருமணம் செய்ததன்மூலம் பனையன் என்பவரை தெரியும். ஜெயமணியின் கணவர் பனையன் வெளிநாட்டில் வேலை செய்த விவரம் எனக்கு தெரியும். சுமார் 2013ம் வருடம் நான் தனுஸ்கோடி வீட்டிற்கு சென்று ஏதோ ஒரு விஷயமாக பேசிக்கொண்டிருந்தோம், அப்போது ஆஜர் ஜர் எதிரி ரத்தின சபாபதி அங்கு வந்தார். அவர் அசா1 தனுஸ்கோடியிடம் பணம் தேவைப்படுவதாக கூறினார். அதன்பிறகு நான் எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். மறுநாள் தனுஸ்கோடி, ரத்தினசபாபதி பணம் கேட்டு வந்ததாகவும், நான் நகை கொடுத்தாக சொன்னார். எவ்வளவு நகை என்று நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. பின்னர் சுமார் 2 வருடம் கழித்து எதிரி ரத்தின சபாபதியிடம் கொடுத்த நகையை தன்னிடம் கொடுக்கவில்லை என்று தனுஸ்கோடி என்னிடம் சொன்னார். இதுசம்மந்தமாக போலீசார் விசாரித்தபோது ரத்தினசபாபதி அசா1டம் வாங்கிய நகையை அவரிடம் கொடுக்கவில்லை அவர் சொன்னதாக நான் போலீசாரிடம் சொன்னேன். பின்னர் தனுஸ்கோடி என்னிடம் எதிரியிடம் ரத்தினசபாபதியிடம் கொடுத்த 4 பவுன் நகையை அசா1டிம் கொடுத்துவிட்டதாகவும், மீதமுள்ள சுமார் 10

பவுன் எதிரி ரத்தின சபாபதி திருப்பிதருவதாவும் சொன்னார். நகையை கடையில் அடகு வைத்திருப்பதாகவும் என்னிடம் தனுஸ்கோடி சொன்னார். எந்த கடை என்று நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. மேலும் தனுஸ்கோடி என்னிடம் நகையை வாங்கிவிட்டு எதிரி ரத்தின சபாபதி என்னை ஏமாற்றிவிட்டார் என்று என்னிடம் சொன்னார். போலீசார் இதுசம்மந்தமாக விசாரித்தபோது நடந்ததை சொன்னேன்.

**1ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

அசா1 தனுஸ்கோடி எனது உறவினர் என்றால் சரிதான். எதிரி ரத்தின சபாபதி எந்த தேதியில் பணம் கேட்டு வந்தார் என்று தேதி தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ரத்தின சபாபதி பணம் கேட்டு வந்தபோது அசா1 தனுஸ்கோடி மகள் ஜெயமணி அங்கு இருந்தாரா என்றால் அவர் வீட்டின் உள்ளே இருந்தார், நங்கள் வெளியே பேசிக்கொண்டிருந்தோம். ரத்தின சபாபதி பணம் கேட்டு வந்த அன்று அவர் நகை அல்லது பணம் பெற்றாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தனுஸ்கோடி புகார் கொடுக்க சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. கீழவளவு காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றேனா என்றால் சென்றேன். அன்று தனுஸ்கோடி மகள் ஜெயமணியை போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை, நானும், தனுஸ்கோடியும்தான் சென்றோம். தனுஸ்கோடி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது, அசா1 தனுஸ்கோடி என்னிடம் எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று கூறப்பட்டு, இத்துடன் குறுக்குவிசாரணை முடித்துவைக்கப்படுகிறது.**